# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 81/2023 தேதி- 01.08.2026
(DW.2) – மேரி சரோஜா

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.இந்த வழக்கில் வாதிகள், பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். முன்ஜென்மிகள் செற்றில்மென்ட் ஆவண எண்.632/1972 ன் படி எல்லா உறவினர்கள் சொத்திற்கு சென்று வர பாதை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பாதையை எத்தனை ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் 50 ஆண்டிற்கு மேலாக பயன்படுத்தி வருகிறேன். என்னுடைய வீடு மற்றும் மற்ற உறவினர்களின் வீடு வழக்கு B பட்டிகை சொத்தான பாதையின் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. வழக்கு B பட்டிகை சொத்தை பாதை எத்தனை குடும்பங்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் 3 குடும்பங்கள் பயன்படுத்தி வருகிறோம். வழக்கு B பட்டிகை சொத்தான அகலமான பாதையை கொரோனா காலத்தில் 1 வது பிரதிவாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் சிறிதளவு பாதையை அபகரித்து காம்பவுண்ட் சுவர் மற்றும் செட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் அளித்தோம்.

3.காவல் நிலையத்தில் புகார் குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு அறிவுரை ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான்.